முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 235 /2022

27.01.2025 பி.வா.சா.1 திரு.சேதுராமசுந்தரம்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு கண்ணன் என்பவர் 2022ல் பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அதற்கு முன்பு தாவா சொத்தை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு தெரியும். வாதியின் தாவா சொத்தின் சர்வே எண் டி.எஸ்.நம்பர் 118/1,2 என்றால் இல்லை 118/1 மற்றும் 1 ஏ. சர்வே எண்.118/2 பூமியில் உள்ளதா என்றால் உள்ளது. அது முடுக்கு பகுதி என்றால் சரிதான். டி.எஸ். நம்பர் 118/1 மற்றும் 2ன் வருவாய் துறை ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 118/1 மற்றும்2 ஆகிய 2 சொத்துகளும் நாளது தேதி வரை வாதி பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களின் வருவாய் துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் 118/1 மற்றும்1 ஏ மைதீன் பிச்சை பெயரில் உள்ளது. 118/2 பட்டா படி வள்ளியம்மாள் என்று உள்ளது அது எங்களுடைய சொத்து. 118/2 வள்ளியம்மாள் பெயரில் உள்ளதற்கு ஏதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் 118/2 வள்ளியம்மாள் பெயரில் உள்ளது என கூறுகிறேன் என்றால் பட்டாவை பாரத்து தெரிந்துக்கொண்டேன். அந்த பட்டா இன்றைய தேதிவரை வள்ளியம்மாள் பெயரில் தான்உள்ளது. 118/2 க்கு இன்றைய தேதி வரை பிரதிவாதிகள் பெயரில் பட்டா எதுவும் இல்லை. 118/2 தான் முடுக்கு பகுதி என்றால் சரிதான்.

2. 118/2 தான் பிராது 2ம் தபசில் சொத்து என்றால் சரிதான். 118/1, 118/2 ஆகிய சொத்துக்களில் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் பத்திரம் உள்ளது, பட்டா இல்லை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள நகர அளவை பி.வா.சா.ஆ.8 முதல் 12 ஆகியவற்றில் டி.எஸ்.நம்பர் 119/1, 119/2 ஆகியவற்றிற்கு தான் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ல் டி.எஸ்.நம்பர் 119மட்டும் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 முதல் 12 வரையிலான ஆவணங்களில் கிழமேல் அளவுகள் காட்ப்படவில்லை என்றால் சரிதான். கதவு எண். 32, 32 ஏ, 32/1 ஆகிய மூன்று சொத்துக்களும் லெட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. என்ன ஆவணம் உள்ளது என்றால் இல்லை. பொதுவாக சொத்தில் உரிமையில்லாத நபர் எந்த ஆவணமும் எழுதி வைக்கமுடியாது என்றால் சரிதான்.

3. லெட்சுமியம்மாள் உயில் ஆவணம் எழுதியது பற்றி எனக்கு நேரியாக தெரியாது என்றால் சரிதான். லெட்சுமியம்மாள் உயில் எழுதி வைத்த விவரம் வேறு யாருக்கும் தெரியாது என்றால் சரியல்ல ஊர்காரருக்கு தெரியும். பி.வா.சா.ஆ 6 ஆவணத்தில் கண்ட சொத்து லெட்சுமியம்மாளுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் தபசில் சொத்தை வணிக வைஷ்சிய சமூதாய பொது மக்களுக்கு பயன்படும் வகையில் மேற்படி நிருவாக கமிட்டி சர்வ சுதந்திரமாக ஆண்டு அனுபவித்து கொள்ளவேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணம் எழுதுவதற்கு முன்பு பி.வா.சா.ஆ.6 தபசில் விவரத்தை எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. சர்வே ஆவணங்களில் டி.எஸ்.நம்பர் 119 க்கு கிழமேல் அளவு என்ன உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை.

4. பி.வா.சா.ஆ.6 ஆவணம் தான் எங்களுடைய மூல ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 6 ல் கண்ட மேற்கு எல்கையாக டி.எஸ்.நம்பர் 118 லெட்சுமியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்ட ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் உள்ளது. 1951, 1958 மைதீன் பிச்சை ஆவணத்தில் காட்டப்பட்டுள்ளது. லெட்சுமியம்மாள் பெயரில் டி.எஸ். நம்பர் 118 இருந்தது என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் தற்போது கைவசம் இல்லை. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள், யார் இந்த ஆவணத்தை ஏற்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நிரூவாக கமிட்டி வணிக வைஷ்சிய சமூதாய பொது மக்களுக்குபொதுவாக பயன்படும் வகையில் பயன்படுத்தினார்களா என்றால் பயன்படுத்தினார்கள். டி.எஸ்.119 ஐ என்ன வகைக்காக பயன்படுத்தினார்கள் என்றால் பயன்படுத்தவில்லை, அது கண்ணன் பெயரில் தான் உள்ளது. அந்த சொத்தை கிரையம் கொடுப்பதற்கு பி.வா.சா.ஆ.6 ல் எந்த சரத்து காட்டப்படவில்லை என்றால் சரிதான்.

5. டி.எஸ்.நம்பர் 119 சொத்தை லெட்சுமியம்மாள் அனுபவம் செய்து வந்ததை காட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். வெள்ளையம்மாளின் மகள் தான் மீனாட்சி என்பதை காட்ட வாரிசு சான்றிதழ் உள்ளதா என்றால் இல்லை. தளவாய் செட்டியார் லெட்சுமியம்மாளை 2 வதாக திருமணம் செய்ததற்கு ஆவணம் இல்லை என்றால் சரிதான். வெள்ளையம்மாள் தளவாய் செட்டியார் ஆகியோர்கள் தாவா சொத்தை அனுபவம் செய்தார்கள் என்பதை காட்ட ஆவணம் இல்லை என்றால் சரிதான். கோவில் நிரூவாக கமிட்டி தாவா

சொத்தை விற்பனை செய்வதற்கு ஏதாவது தீர்மாணம் போட்டார்களா என்றால் போட்டாரகள் அந்த தீர்மானத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தீர்மானம் போட்டதாக எதிர்வழக்குரையிலும் என்னுடைய நிரூபண வாக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ன் மேற்கு எல்கையாக முடுக்கு என்று காட்டப்படவில்லை என்றால் சரிதான் 4 அடி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. டி.எஸ்.நம்பர் 118, 119 சொத்திற்கு லெட்சுமியம்மாள் பெயரில் 1. பட்டாவோ, 2. தீர்வை ரசீதோ, 3. நகர புல அளவை பதிவேடோ இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 முதல் 12 ஆவணங்கள் டி.எஸ்.நம்பர் 119/1,2 ஆகியவற்றிற்கு தான் உள்ளது என்றால் சரிதான். 118 லெட்சுமியம்மாள் பெயரில் இல்லை என்றால் அது வெள்ளையம்மாள் பெயரில் உள்ளது.

5. பி.வா.சா.ஆ.2 ல் கண்ட 1,2 பார்டிகள் பேட்டையில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அவர்களை விசாரித்தால் என்ன காரணத்திற்காக பொது அதிகார ஆவணம் கொடுக்கப்பட்டது என்று தெரியவரும் என்றால் சரிதான். சர்வே வரைபடத்தில் டி.எஸ்.நம்பர். 119 க்கு கிழமேல் அளவு 5 மீட்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது 5 மீட்டர் வீடு உள்ளது, வாசல் 1.2 மற்றும் முடுக்கு 0.6 மீட்டர் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். அப்போது நான் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த சர்வே வரைபடத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த வரைபத்தில் சர்வே எண் 119/1–ன் 1 பகுதி 1.2 மீட்டர் என்றும் 119/2 3.8 ஆக மொத்தம் 5 மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அந்த ஆவணத்தைப்பற்றி தெரியவில்லை ஆனால் 5 மீட்டரையும் 1.2 மீட்டரையும் கூட்டினால் தான் பத்திரப்படி சரியாக இருக்கும். பத்திரத்திரம் என்று சொல்லக்கூடியது பி.வா.சா.ஆ.6 ஆவணம். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்ட கிழமேல் அளவு தவறானது என்றால் சரியல்ல.

6. 5 மீட்டர் கிழமேல் அளவுள்ள சொத்தை 6.2 மீட்டர்இருப்பதாக கூடுதலாக கற்பனை செய்து ஆவணத்தை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தபசில் சொத்தை பார்வையிடும்போது நான் நீதிமன்ற ஆணையருக்கு ஒரு கடிதம் கொடுத்தேனா என்றால் நீதிமன்ற ஆணையர் என்னை மிரட்டிஎழுதி வாங்கிக்கொண்டார். 118/1ல் உள்ள முடுக்கின் முன்புறம் உள்ள தகர ஷெட்டை வாதி வைத்துள்ளார் என்றால் சரிதான்,நாய் வருவதற்காக வைத்துள்ளதாக அவரே கூறியுள்ளார். வா.சா.ஆ.9 ல் உள்ள தகர கதவைத்தான் வாதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த

முடுக்கின் பின் பகுதியில் வாதி வீட்டிற்கு செல்லக்கூடிய மாடி படிக்கட்டு உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ல் கண்ட 2 வது பக்க புகைப்படத்தில் உள்ளது தான் மேற்படி மாடிபடி என்றால் சரிதான். அந்தபுகைப்படத்தில் கண்ட தண்ணீர் தொட்டியை யார் வைத்தார் என்றால் வாதி தான் வைத்தார், புகைப்படம் வைப்பதற்காக சும்மா வைத்தார். வா.சா.ஆ.9 2ம் பக்க புகைப்படத்தில் கண்ட கிழக்கு பக்கம் உள்ள சுவர் கதவு எண். 32 வீட்டின் மேற்கு பக்க சுவர் என்றால் சரிதான். அந்த சுவரில் ஜன்னலோ, வாசலோ இல்லை என்றால் முன்பு ஜன்னல் இருந்தது அதன் பின்னர் ஜன்னல் அடைக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் ஜன்னல் இல்லை என்றால் சரிதான். அந்த ஜன்னலை யார் அடைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கதவு எண்.32 வீட்டில் மேற்கு பக்க சுவரில் ஜன்னல் வைத்து லெட்சுமியம்மாள் அனுபவம் செய்து வைத்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். மழை நீர் விழுவதற்காக கவலம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளோம்.

7. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் கண்ட அளவுகள் சரியதான என்றால் தவறானது. நீதிமன்றத்தில் உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிய பிறகும் நான் கட்டுமானம் கட்டுவதாக வாதி எனக்கு எதிராக புகார் அளித்தார் என்றால் சரிதான், தற்போது கட்டக்கூடாது என்று காவல் துறை பாதுகாப்பு கோரி வாதி தாக்கல் செய்த மனு அனுமதித்து உத்திரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற உத்தரவை அவமதித்ததற்காக 2ம் பிரதிவாதியை சிறையில் வைக்கவேண்டும் என்று தனியாக மனு தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது . சீதாலெட்சுமி மஸ்கட்டில் உள்ளார். சீதாலெட்சுமி இங்கு வந்தார் சிறையில் அடைக்கப்படுவார் என்பதால் தான் வெளி நாட்டில் மறைந்துள்ளார் என்றால் சரியல்ல. கட்டுமான வேலை துவங்குவதற்கு முன்பே அவர் வெளிநாட்டில் தான் உள்ளார். டி.எஸ்.நம்பர் .119 தவிர உரிமையில்லாத டி.எஸ்.நம்பர் 118 ல் ஏற்படுத்தியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி தர நாங்கள் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 118 ல் அவர்களுக்கும் உரிமை இல்லை. தற்போது புது சுவரில் 2 வீடுகளிலும் தலா 2 ஜன்னல் வைத்துள்ளோம். தற்போது கட்டுமான வேலை நடக்கவில்லை. வாதி பிராதில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

ஒப்பம்/என்.வள்ளியம்மா
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.